**பாரதீய ஜனதா கட்சி**

**மத்திய அலுவலகம்**

**11, அசோக் சாலை, புதுடெல்லி-110001**

**தொ.பே.எண்: 23005700, தொலைநகல்: 23005787**

# பாஜகவின் தலைவர் திரு.ராஜ்நாத் சிங்கின் அறிக்கை, மே 11,2013,புதுடெல்லி

**விண்ணைத் தொட்ட ஊழல்கள் மற்றும் அவற்றை மறைக்கும் முயற்சிகள்**

அடுக்கடுக்கான பெரிய ஊழல்களுக்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணி பெயர்பெற்ற ஒன்றாகிவிட்டது. 550 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஊழல் சர்ச்சைகள் வாயிலாக சுதந்திர இந்தியாவின் வரலாற்றிலேயே, அதிக ஊழல் செய்த அரசாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு உள்ளது. ஆளும் அரசின் இத்தகைய தொடர் ஊழல்களால் நம் நாட்டின் நிர்வாகத்திற்கே அபாயம் ஏற்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசோ, ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளானவர்களை, கடைசிவரை காப்பதில் ஒரு போக்கையே உருவாக்கியுள்ளது. வேறு வழியில்லாத போது மட்டுமே குறைந்தபட்ச நடவடிக்கையை எடுக்கிறது.

**ஊழல் மற்றும் முறைகேடு தொடர்பான குற்றச்சாட்டுகள் உள்ள இரண்டு மத்திய அமைச்சர்கள் நேற்றிரவு தங்கள் பதவியிலிருந்து விலகினார்கள். பிரதமர் இந்த இரண்டு கறைபடிந்த அமைச்சர்களையும், தாமதமின்றி பதவியிலிருந்து விலக்கியிருந்தால், நாடாளுமன்றத்தின் பட்ஜெட் தொடர் காப்பாற்றப்பட்டிருக்கும்.உணவுப்பாதுகாப்பு மற்றும் நிலம் கையகப்படுத்தல் தொடர்பான முக்கிய மசோதாக்கள் விவாதத்திற்காகவும் ஒப்புதலுக்காகவும் காத்திருந்தன. ஆனால் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசோ பிடிவாதமாக நின்று வாய்ப்பை இழந்துவிட்டது.**

ரயில்வே துறை அமைச்சரை பிரதமர் பாதுகாத்த விதம் தொடர்பாக பல கேள்விகள் மக்களிடையே எழுந்துள்ளன. அவர் அமைச்சரவையிலிருந்து வெளியேற வேண்டியவர் என்று தெரிந்தும் எப்படி பிரதமரால் அவருக்கு வக்காலத்து வாங்க முடிந்தது? 17 ஆண்டுகளுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒருவர் ரயில்வே அமைச்சகத்துக்கு பொறுப்பேற்கிறார். அவர் பொறுப்பேற்றவுடன் ரயில் கட்டணங்களில் பெரும் ஏற்றம் செய்யப்பட்டது. அத்துடன் ரயில்வே துறையின் முக்கிய பொறுப்புகளுக்கு அதிகாரிகளை நியமிப்பதில் பெருமளவு ஊழல் நடந்துள்ளதாகவும் கேள்விப்படுகிறோம்.

**அபாயத்தில் உள்ள நிர்வாகம்**

மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ், சிபிஐ அமைப்பு கூண்டுக்கிளியாக இருப்பது குறித்து உச்சநீதிமன்றம் தெரிவித்த கருத்துகள் மீது மக்களின் கவனத்தைக் குவிக்க

பாஜக விரும்புகிறது. நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு ஊழல் தொடர்பான புலனாய்வு விவரங்களை தன்னிடமே நேரில் முதலில் கொடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தும், அந்த அறிக்கையைக் கட்டாயமாக சட்ட அமைச்சரும், பிரதமர் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகளும் பார்த்து திருத்தங்களும் செய்துள்ளனர். அஸ்வின் குமார் மற்றும் பிரதமர் அலுவலக அதிகாரிகள், சிபிஐயை மிரட்டியுள்ளனர். சட்டரீதியான நடைமுறைகளைக் குலைக்க முயன்றதன் மூலம் மோசமான நடவடிக்கையில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஈடுபட்டுள்ளது. அத்துடன் மத்திய அரசு என்ற அமைப்பின் பதில் சொல்லும் கடமை மற்றும் பொறுப்பு தொடர்பாகவும் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன. **நமது ஜனநாயகத்தில் சட்டரீதியான நடைமுறைகளின் கௌரவத்தை எள்ளளவும் சீர்குலையாமல் காப்பதுதான் அரசின் முக்கியமான கடமை என்பதை நாம் மறந்துவிடவே கூடாது.**

உச்சநீதிமன்றத்தின் கண்டனத்துக்குப் பிறகு, சட்ட அமைச்சரின் நிலை மட்டும் அல்ல, பிரதமரின் நாற்காலியும் ஆட்டம் கண்டுள்ளது. சட்ட அமைச்சர்களும், பிற அதிகாரிகளும் மாற்றிய அறிக்கை தொடர்புடைய நிலக்கரி சுரங்கத் துறையில் சர்ச்சைக்குரிய காரியங்கள் நடந்தபோது அந்த துறைக்கு பொறுப்பு வகித்தது பிரதமர் தான். அந்த அறிக்கையை மாற்றுவதற்கு அஸ்வின் குமார் தனது செல்வாக்கைப் பயன்படுத்தினார் எனில், பிரதமர் அலுவலகத்துக்கும் அதில் பொறுப்பு உள்ளதல்லவா?

2ஜி அலைக்கற்றை ஊழல் மற்றும் நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு ஊழல் என்று எதுவாகவும் இருக்கட்டும், பிரதமர் அலுவலகம் மீது மிக நீண்டகாலமாகவே சந்தேகத்தின் நிழல் படிந்துதான் உள்ளது. சிபிஐ அறிக்கையை மாற்ற முயன்றதன் மூலம் பிரதமரைக் காப்பதில் அரசு தோல்வியுற்றுள்ளது. ஆனால் அஸ்வின் குமார் அவர்களின் பதவி விலகலுக்குப் பின்னர், அரசு அம்பலப்பட்டு நிற்கிறது.

பிரதமர் மீது கவனம் திரும்பாமல் இருப்பதற்கு பலியாடுகளாக அஸ்வின் குமார் மற்றும் பவன் பன்சலின் பதவிகள் பறிக்கப்பட்டுள்ளன என்றே பாஜக நம்புகிறது.

**நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு ஊழல் தொடர்பாக சிபிஐயின் அறிக்கையை பிரதமர் அலுவலக அதிகாரி முன்னிலையில் ஏன் சட்ட அமைச்சர் மாற்றினார்?**

**பிரதமரே நிலக்கரித் துறை அமைச்சராக இருந்த காலத்தில் நடந்த நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு தொடர்பான விவரங்களை மறைக்கும் நடவடிக்கை இல்லையா?**

**2ஜி அலைக்கற்றை விவகாரத்தை ஆராயும் கூட்டு நாடாளுமன்ற குழு, ஏன் அ.ராசாவை தன் தரப்பைச் சொல்வதற்கு அனுமதிக்கவில்லை?**

**பொதுக் கணக்குக் குழுவின் முன்பு ஆஜராவேன் கூறிய பிரதமர் ஏன், கூட்டு நாடாளுமன்றக் குழுவிற்கு முன் விசாரணைக்கு வரவில்லை?**

**இந்தக் கேள்விகளுக்கெல்லாம் திருப்திகரமான பதில்கள் இல்லை.**

காங்கிரஸ் ஊழல் குற்றச்சாட்டுகளைச் சந்திப்பது இது முதல்முறை அல்ல. முன்பு இருந்த காங்கிரஸ் அரசுகளிலும் அமரர். ராஜீவ் காந்தி மற்றும் அமரர் நரசிம்மராவ் போன்றோர் ஊழல் குற்றச்சாட்டுகளைச் சந்தித்துள்ளனர். ஆனால் இப்போதைய நிலையோ வேறுபட்டது. மொத்த நிர்வாகமும் கேள்விக்குள்ளான நிலையில் உள்ளது. அரசு என்ற அமைப்பின் மேலேயே மக்கள் சந்தேகப்படத் தொடங்கியுள்ளனர். பொறுப்பான எதிர்கட்சியாக, இந்திய ஜனநாயகத்தின் பங்குதாரர்கள் அனைவரும்,

பிரிவினை அரசியலைத் தாண்டி நமது அரசியல் அமைப்பின் நம்பகத்தன்மையைக் காப்பதற்காக ஒன்று சேரவேண்டும் என்று பாஜக உணர்கிறது. **அரசியல் அமைப்பின் மீதான மக்களின் அவநம்பிக்கையை சீர்செய்வதற்கு பிரதமர் மன்மோகன் சிங், தனது நிலையை சுயபரிசீலனை செய்து தகுந்த தீர்மானத்தை எடுத்தல் வேண்டும்.**

அரசு தார்மீக பலத்தை முற்றிலும் இழந்து நிற்கிறது. வெறுமனே எண்கள் பலத்தில் உயிர்பிழைத்து வருகிறது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கான எண் பலத்துக்கு உதவியாக இருப்பவை உத்தரப் பிரதேசத்திலிருக்கும் சமாஜ்வாதி மற்றும் பகுஜன் சமாஜ் கட்சிகள்.

அரசியல் நிர்வாக அமைப்பின் சீர்குலைவு குறித்து உண்மையிலேயே சமாஜ்வாதி கட்சியும், பகுஜன் சமாஜூம் கவலை கொண்டிருக்குமானால், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு கொடுத்துவரும் ஆதரவை அக்கட்சிகள் விலக்கிக் கொள்ளவேண்டும் என்று நான் கோருகிறேன். இல்லையெனில் இத்தகைய மோசமான சூழ்நிலைக்கு அவர்களும் பொறுப்பாவார்கள்.

அஸ்வினி குமார் மற்றும் பவன் பன்சாலின் தாமத பதவி விலகலால் குலைந்துவிட்ட ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் நம்பகத்தன்மை மீண்டும் சீரடைவதற்கு வாய்ப்பே இல்லை.

நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட அனைத்து குரல்களையும் மத்திய அரசும், மொத்த அமைப்பும் செவிமடுக்காமலே போனதால், பாஜக மக்களிடம் செல்ல தற்போது முடிவெடுத்துள்ளது. மே 27 ஆம் தேதி தொடங்கி ஜூன் 2 ஆம் தேதி வரை தர்ணாக்களை நடத்தி நாடு முழுவதும் போராட்டத்தையும், விழிப்புணர்வு பிரச்சாரத்தையும் நடத்த உள்ளது. ஜெயில் பரோ அந்தோலன் என்ற கோஷத்தின் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் தொடர்ச்சியான முறைகேடுகள், ஊழல் மற்றும் செயல்படாத நிலை குறித்த பிரச்சாரத்தைத் தொடங்க உள்ளது.

**<u>அபாயத்தில் இருக்கும் தேசப் பாதுகாப்பு</u>**

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் நிர்வாகத்தின் கீழ் தேசியப் பாதுகாப்பு நிலை மோசமாக உள்ளது. நமது சர்வதேச எல்லைகள் தொடர்ந்து அண்டை நாடுகளால் அத்துமீறப்படுகின்றன. சமீபத்தில் லடாக் தவுலத் பெக் ஓல்டி பிராந்தியத்தில் நடந்த ஊடுருவல் மிகத் தீவிரமான ஒன்று. சீனப் படைகள் நமது எல்லைக்குள் வந்து எந்த அச்சமும் இன்றி முகாம்களை அமைத்தனர். மூன்று வாரங்கள் அரசியல் உறுதிப்பாடு இல்லாததால் இப்பிரச்னை தீர்க்கப்படாமலேயே இருந்தது. ஊடுருவல் பிரச்னையில் சீனப் படைகள் பின்வாங்கிவிட்டன என்று அரசு தற்போது கூறினாலும், நமது பாதுகாப்பு உள்கட்டுமானங்களை(பதுங்குகுழிகளை) குறைப்பதற்கு இந்திய அரசு சம்மதித்துள்ளதாக ஊடகச் செய்திகள் வருகின்றன. சுமார் பள்ளத்தாக்கில் இந்த தந்திர பேரத்தால் காவல் பணிகள் குறைக்கப்பட்டுள்ளன.தேசியப் பாதுகாப்பு மற்றும் இறையாண்மை விஷயத்தில் முழுமையான தார்மீக ஆதரவை அரசுக்குக் கொடுப்பதற்கு விரும்புகிறோம். ஆனால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் நடந்தவற்றை அரசு வெளிப்படையாக எங்களிடம் தெளிவுபடுத்த வேண்டும்.

அயலுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்சித், பெய்ஜிங்குக்கு அலுவல்பூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டார். சீனப்படையினர் ஊடுருவல் உள்ளிட்ட முக்கியப்

பிரச்னைகளை அவர் பேசுவார் என்று நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். ஆனால் ராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளில் இதுபோன்ற விஷயங்களைக் கோடிட்டுக் கூட அவர் காட்டவில்லை என்று தெரியவருவது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது.

லடாக்கில் மக்கள் விடுதலைப் படையின் ஊடுருவல் சம்பவத்தை தனித்த ஒன்றாக கருதமுடியாது. எல்லைப் பிரச்னையின் அடிப்படையில் பார்த்தால் அதற்கு வேறு கோணம் உள்ளது. பாகிஸ்தானில் உள்ள க்வடார் துறைமுகத்தில் சீனா நிர்வாக கட்டுப்பாட்டை மேற்கொள்வதும், எல்லையில் படையினரை நிறுத்துவதும், அருணாச்சல் பிரதேச மாநிலத்தைத் தொடர்ந்து கோருவதும், ஜம்மு-காஷ்மீர் மக்களுக்கு போலி விசா கொடுப்பது, பிரம்மபுத்ரா நதியைத் தடுப்பதும், சீனாவுக்கு ஏதோ ஒரு பெரும் திட்டம் இருப்பதையே உணர்த்துவதாக உள்ளது. இத்திட்டங்களைத் தடுப்பதில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தவறியுள்ளது. அத்துடன் இந்தியாவின் ராஜதந்திர நலன்களைப் பாதுகாப்பதிலும் வலுவான நடவடிக்கைகளை ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு எடுக்கவேயில்லை. சீனா, பாகிஸ்தான், நேப்பாள், இலங்கை போன்ற நாடுகள் விஷயத்தில் மட்டுமல்ல மாலத்தீவு போன்ற நாடுகளுடன் கூட இந்தியாவின் ராஜதந்திர நிர்வாகம் கடுமையான தோல்வியைக் கண்டுள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் ஆட்சியில் இந்தியாவின் அயலுறவுக் கொள்கை திட்டமிடுதல், பிரம்மாண்டமாகவும், எதார்த்தமாகவும் இருந்த்தோடு மட்டுமின்றி தொலைநோக்குத் தன்மையுடனும், லட்சியங்களுடனும் இருந்தன. அந்த திட்டமிடலை முழுமையாக ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு சீர்குலைத்துள்ளது. ராஜதந்திர ரீதியாக இதே பலவீனத்துடன் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அதிகாரித்தில் தொடர்ந்தால், நேட்டோ படைகள் 2014 இல் ஆப்கனை விட்டு வெளியேறும் போது இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரிய அச்சுறுத்தல் ஏற்படும்.

(ஓ.பி.கோஹ்லி)
தலைமை நிலையப் பொறுப்பாளர்